RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2228

OPEN ACCESS

# வேல ராமமூர்த்தி புதினங்களில் தெய்வங்களும் வழிபாட்டு மரபுகளும்

அ. நந்தினி [அ, *], பா. சிவன்பாண்டி [அ]

[அ] தமிழ் உயராய்வு மையம் செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625001, தமிழ்நாடு, இந்தியா

# Deities and Traditions of Worship in Vela Ramamoorthy's Novels

A. Nanthini [a, *], P. Sivanpandi [a]

[a] Department of Tamil, Senthamil College, Madurai-625001, Tamil Nadu, India

* Corresponding Author: sachsiva18@gmail.com

Received: 11.09.2022
Revised: 13-11-2022
Accepted: 18-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Beliefs in the deity are associated with human life. As an expression of that belief, the methods of worshipping these deities have evolved and have been practiced for ages; hence, they have acquired the name and respect of worship traditions. These can be identified in most of the Tamil literature. As far as Tamil literature is concerned, from the first available book, Tolkappiyam, one can identify the thoughts of the deity and the records of worship. It is worth considering that Tolkappiyar refers to the deity as the primary object in the theme. In the years that followed, it can be seen that thoughts about the deity have increased. In this way, this article deals with the deities and traditions of worship recorded in the novels of Vela Ramamoorthy.

**Keywords:** Traditions, Worship, Vela Ramamoorthy's Novels, Deities

## முன்னுரை

மனித வாழ்வியல் பல்வேறு அடுக்குகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவனது ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஆதாரமாக ஏதேனும் ஒரு காரணம் பின்புலத்தில் இருக்கிறது. தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை கிடைக்கும் முதல் நூலான தொல்காப்பியம் தொடங்கி தெய்வம் பற்றிய சிந்தனைகளையும், வழிபாடு குறித்த பதிவுகளையும் அடையாளம் காணமுடிகின்றது. கருப்பொருளில் முதற்பொருளாகத் தொல்காப்பியர் தெய்வத்தைச் சுட்டுவது சிந்தனைக்குரியதாகும். அதற்கடுத்து வந்த காலகட்டங்களில் தெய்வம் குறித்த சிந்தனைகள் அதிகமாகியுள்ளதை அறியலாம். அவ்வகையில் வேல ராமமூர்த்தியின் புதினங்களில் பதிவு பெற்றுள்ள தெய்வங்களைப் பற்றியும் வழிபாட்டு மரபுகள் பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமயங்களும் தெய்வங்களும்

மனிதன் தமக்கு மீறிய ஆற்றல் ஒன்று உண்டு என்று நம்பத் தொடங்கிய காலம் முதல் வழிபாட்டு முறைகள் உருவாகி வளரத் தொடங்கின. தொடக்ககால வழிபாடுகள் முழுக்க முழுக்க இயற்கை சார்ந்த நடைமுறையாக இருந்தன. இன்றைய நிலையில் ‘வழிபாடு’ என்பது ‘மத நிறுவனம்’ சார்ந்த வழக்கமாக பரிணாமடைந்திருக்கிறது. மத நிறுவனம் சாராத வழிபாட்டு முறைகளும் பெருந்திரளான மக்களிடம் வழக்கில் உள்ளது. “இன்று மக்கள் இரண்டு விதமான சமயநெறிகளைப் பின்பற்றுகிறார்கள். ஒன்று நிறுவன சமயம். இன்னொன்று நாட்டார் தெய்வ வழிபாடு. நிறுவன சமயம் (Institutionalised Religions) என்பது சைவம், வைணவம், வைதீகம், கிறித்துவம், இஸ்லாம் போல ஒரு

முழுமுதற் கடவுளையும் எழுதப்பட்ட வேத ஆகம விதிகளையும் மடம், சபை, கோவில், மசூதி போன்ற மையப்பட்ட நிறுவன ஏற்பாடுகளையும் கொண்டது.

இதற்கு மாறாக நாட்டார் தெய்வ வழிபாடு என்பது எந்த எழுதப்பட்ட ஆகம நெறியும், ஒரு முழுமுதற்கடவுளும், மையமும் இல்லாதது. ஆயிரக்கணக்கான சாமிகளைக் கொண்டது" (Tamilselvan, 2003).

ஆப்பனாட்டு மறவர் இனத்தைப் பொருத்தமட்டில் 'நாட்டார் தெய்வ வழிபாட்டு மரபை'பின்பற்றி வருவதை வேல ராமமூர்த்தியின் புதினங்களின் வழியாக அறியமுடிகிறது. தமிழ்ச் சூழலில் நாட்டார் தெய்வ வழிபாட்டு மரபுகள் குறித்து ஏராளமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. "நாட்டுப்புறத் தெய்வங்கள் மக்கள் பண்பாட்டோடு ஒட்டி உறவாடுபவை. மக்களின் வாழ்வியலின் அங்கமாக இருப்பவை. குறிப்பிட்ட வட்டாரத்தைத் தெரிந்து கொள்ளவோ, அவ்வட்டார மக்களை இனங்காணவோ அடையாளங்களாக இருப்பவை நாட்டுத் தெய்வங்களேயாகும்" என்கிறார் துளசி இராமசாமி (Ramachandran, 2002). மேலும் அவர், "நாட்டுப்புறத் தெய்வங்கள் எல்லாம் மனிதர்களாக இருக்கும்போது மக்கள் வாழ்வியலில் இணைந்திருந்தவர்கள் அவர்களுக்குக் கெடுதல்களோ நன்மைகளோ செய்து அவர்களோடு வாழ்ந்தவர்கள். அந்தப் பண்பாட்டுச் சூழல்களில் வாழ்ந்தவர்கள். தெய்வமாக மாறியபின் அந்தந்த மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரங்களாக இருக்கின்றவர்கள். நல்லது நடந்தால் பலன் கிடைத்தது என்று பெருமைப்படுகின்றவர்கள் நல்லது நடக்காவிட்டால் தெய்வங்களை வெறுத்தொதுக்குவதில்லை தெய்வக் குற்றம் ஏற்பட்டு விட்டது அடுத்து, குறையை நிவர்த்தி செய்து வழிபட வேண்டும் என்று நம்புகிறார்கள். நம்பிக்கை வீண்போகாது என்பது அவர்கள் எண்ணம். நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுவது என்பது ஊர்கூடிச் செய்வதாகும் சாதிகூடி முடிவெடுப்பதாகும் குலத்தினர் வழிபடுவதாகும். ஆகவே, நல்லது நடந்தாலும், கெட்டது நடந்தாலும் வழிபாட்டைத் தடைபடுத்த மாட்டார்கள். தடைப்படுத்தினால் அடுத்த குலத்தினர் மதிக்க மாட்டார்கள் ஏளனமாகப் பேசுவார்கள்"[3] என்று நாட்டுப்புறத் தெய்வங்கள் குறித்து விளக்குகிறார். சாதி, இனம், குலம் ஆகிய அமைப்புகளுக்கும் நாட்டுப்புறத் தெய்வங்களுக்கும் இடையே நிலவும் நெருங்கிய உறவினைப் புலப்படுத்துவதாக இவ்விளக்கம் அமைகிறது.

## நாட்டார் தெய்வ வகைகள்

நாட்டார் தெய்வங்கள் அல்லது நாட்டுப்புறத் தெய்வங்களில் பல வகைகள் உள்ளன. "நாட்டார் தெய்வங்கள் என்ற பொதுப்பெயரின் கீழ்வரும் தெய்வங்களாவன: இனக்குழுத் தெய்வம் / இயற்கை வழிபாடு, வீட்டுத் தெய்வம், குல தெய்வம், சாதித் தெய்வம், ஊர்த் தெய்வம், காவல் தெய்வம், நாடறி தெய்வம் (ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தோன்றி நாடெங்கும் பரவலாக அறியப்பட்ட தெய்வங்கள் மதுரை வீரன், நல்ல தங்காள் போல" நாட்டார் தெய்வங்களில் பல வகைகள் இருப்பதைப் போல நாட்டார் தெய்வ வழிபாட்டிலும் பலவகை மரபுகள் உள்ளன (Tamilselvan, 2003). ஆடு, கோழி போன்று உயிர்ப்பலி கொடுத்தல், சாமியாடுதல், பொங்கல் வைத்தல் முதலியவை போல இப்பட்டியல் நீளும். பொதுவாக நாட்டார் தெய்வ வழிபாடுகளில் ஓர் இறுக்கம் இருக்காது சனநாயகத்தன்மை இருக்கும். தெய்வத்திற்கும் வழிபடுவனுக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வும் இடைவெளியும் குறுகியதாக இருக்கும். "சிறு தெய்வங்கள் என்கிற கிராமப்புறத் தெய்வங்கள் எல்லாமே கைகளில் ஆயுதங்களை ஏந்தியிருக்கும். மக்களோடு மக்களாகச் சில இடங்களில் கூரை இல்லாதபடி நின்று, அவர்களுடைய உணவை உண்டு, உடுத்துபவற்றை உடுத்தி, எளிய மக்களின் வாழ்விலும் கனவிலும் கலந்துவிட்டவை அந்தத் தெய்வங்கள்.

சாதிய அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் பிறப்பதற்கு முன்பே இந்தத் தெய்வங்கள் பிறந்துவிட்டன. இந்த ஆன்மீகம் நாட்டு மக்களின் ஆன்மீகம். அதிகாரச் சார்பற்ற ஆன்மீகம் மற்றவர்களையும் மற்றவற்றையும் ஏற்றுக்கொள்கிற ஆன்மீகம்" என நாட்டார் தெய்வங்களின் சனநாயகப் பண்புகளை எடுத்துரைக்கிறார் தொ. பரமசிவன் (Paramasivam, 2019).

ஆப்பநாட்டு மறவர்கள் வழிபடும் தெய்வங்கள் யாவையும் மேற்குறித்தவாறு சனநாயகப் பண்புகளைக் கொண்ட மிக மிக எளிமையான கிராமதெய்வங்கள் ஆகும். வேல ராமமூர்த்தியின்

புதினங்களின்வழி அறியலாகும் ஆப்பனாட்டு மறவர்களின் வாழ்வில் 'இருளப்பசாமி' எனும் நாட்டார் தெய்வ வழிபாடு தலையாயதாக இருக்கிறது. "சூரியனுக்குக் காட்டிக் கொடுக்கும் புத்தி உண்டு. இருட்டுதான் பாதுகாப்பு. இருளப்பசாமிதான் குலசாமி" (Vela Ramamurthy, 2021a). ஆப்பநாட்டு மறவர்கள் இரவில் வேட்டைக்குச் செல்கிறார்கள், களவுத் தொழிலுக்குச் செல்கிறார்கள். 'இருட்டு'அவர்களுக்கு வாழ்வளிக்கும் தெய்வமாகத் தெரிகிறது. எனவேதான் அவர்கள் 'இருளப்பசாமியை' தங்கள் குல தெய்வமாக வழிபடுகிறார்கள். இவ்வழிபாடு இயற்கை வழிபாட்டிற்கான கூறுகளைக் கொண்டுள்ளது. "மனித இனத்தவரிடையே சமயம் பற்றிய நம்பிக்கை முதன்முதலில் ஏற்பட்டிருக்குமாயின் அது இயற்கைப் பொருள்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு அப்பொருள்களை வழிபட்டதன் மூலமே ஏற்பட்டிருக்கும் என்பார் மேக்ஸ்முல்லர்". பகலைவிட இரவைப் பாதுகாப்பாகக் கருதும் ஆப்பநாட்டினர் இருள் எனும் இயற்கைப் பொருளைத் தெய்வமாக உருவகித்து வழிபடுகின்றனர் (Bhakthavachala Bharathi, 2003).

## இருளப்பசாமியும் மறவர் வாழ்வியலும்

ஒரு காட்டில் இருந்து புலம்பெயரும் வேயன்னா கூட்டம் தாங்கள் குடியேறிய புதிய நிலப்பரப்பில் இருளப்பசாமிக்குக் கோவில் அமைத்து வழிபடத் தொடங்குகிறார்கள். குற்றப்பரம்பரை புதினத்தில் கொம்பூதியில் உள்ள இருளப்பசாமி கோவிலும், குருதியாட்டம் புதினத்தில் பெருங்குடியில் உள்ள இருளப்பசாமி கோவிலும் ஒரே தன்மையில் ஒத்திருக்கின்றன.

"ஊருக்கு வடக்கே, கண்மாய்க்கரை இறக்கத்தில் இருளப்பசாமி கோவில், படிகளுடன் கூடிய எட்டடி உயர பீடம். உச்சியில் நின்றார் இருளப்பசாமி. அள்ளிமுடித்த கொண்டை. வலது கை ஓங்கிய அரிவாள். இடது கை அணைந்த சிம்ம வாகனம். திரண்ட புருவம். தெறிக்கும் விழிகள். கூர்த்த மூக்கு. கொடுவாள் மீசை.

எந்தத் தலைமுறையில் உருவான கோயில் என எவனுக்கும் தெரியலே. காவல்காரன்பட்டியில் இருந்து பிடிமண் எடுத்து வந்து கோயில் உருவானது என சொல்லி வைத்துவிட்டுப் பெருசுகள் செத்துப் போனார்கள்" (Vela Ramamurthy, 2021a).

மூதாதையர்கள் பிடிமண் எடுத்துவந்து இருளப்பசாமிக்குக் கோவில் அமைத்துள்ளார்கள். பிடிமண் எடுக்கும் வழக்கம் நாட்டார் தெய்வ வழிபாட்டு மரபில் நிலவக் கூடியதாகும். தங்கள் உறைவிடத்தில் தங்கள் தெய்வத்திற்குக் கோயில் அமைக்க விரும்பும் ஓர் இனமோ, குலமோ, குடும்பமோ, தங்கள் குலதெய்வத்தின் பூர்விக இடத்தில் பிடிமண் எடுத்துவந்து கோயில் கட்டுவார்கள். இப்படி பிடிமண் எடுத்து கோயில் கட்டும் வழக்கம் நாட்டார் வழிபாட்டு மரபில் மட்டும்தான் இருக்கிறது. நிறுவன சமய வழிபாட்டு மரபில் அப்படியொரு நெறி கிடையாது.

கொம்பூதி, பெருங்குடி, பெருநாழி என மூன்று ஊர்களைச் சேர்ந்த ஆப்ப நாட்டு மறவர்களுக்கும் 'இருளப்பசாமி'தான் குல தெய்வம். அவர்கள் தங்கள் இன்பம், துன்பம் என எல்லா நிலைகளிலும் இருளப்பனே கதி என்று இருக்கிறார்கள்.

"ஓங்கிய அரிவாளோடு இமை ஆடாமல் கிழக்கே பார்த்து நிற்கும் இருளப்பசாமியின் பீடத்தைக் கிழவி அடைந்தாள். 'இருளப்பா' உன் பிள்ளைகளுக்கு இதென்ன கேடுகாலம்!" (Vela Ramamurthy, 2021b).

தங்களுடைய வாழ்வில் ஏதேனும் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடந்தால், அதற்குப் பரிகாரமாக தங்கள் குலதெய்வம் இருளப்பனுக்குக் கிடாய்கள் வெட்டிப் படையல் போடுகிறார்கள். வேயன்னா மகன் 'சேது' இருபது வருடங்கள் கழித்து ஊர் திரும்பியவுடன், அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட இருளப்பனுக்கு 21 கிடாய்கள் வெட்டி படையல் வைக்கிறார்கள்.

"இருபத்தோரு கிடாய்களும் வரிசையாக வெட்டுப்பட்டு, குலசாமிக்கு முன்னால் குதி போட்டுக் கொதித்துக் கொண்டிருந்தன. பெரிய மண் முடாக்களில் அரிசிச்சோறு, குமிழ் அடிக்க வெந்து கொண்டிருந்தது. ஆடிப் பறந்து ஆக்கிக் கொண்டிருந்த பெரிய பொம்பளைகளின் கைத் தோதுக்கு குமரிகள் நின்றார்கள்.

இளவட்டங்கள், ஊரணித் தண்ணீரைக் குடம் குடமாகக் கொண்டு வந்து குலசாமியைக் குளிப்பாட்டினார்கள். கோயில் பீடத்துக்கு முன்னால் கிடந்த படையல் கல்லைத் தூசு, துரும்பு இல்லாமல் நீர் ஊற்றிக் கழுவிவிட்டார்கள்" (குற்ற., பக்.362-363)

"வெந்து இறக்கிய கறியையும் சோறையும் குலசாமிக்கு முன்னால் படையல் கல்லில் கொட்டிக் கவிழ்த்துக் கிண்டினார்கள். இருபத்தியோரு கிடாய்க் கறியும் ஏழெட்டு முடாச் சோறும் மலையாகப் புரண்டு 'சாமிசோறு' ஆனது" (Vela Ramamurthy, 2021a).

இருளப்ப சாமிக்கு முன்னெடுக்கும் திருவிழா குறித்த விரிவான விவரணைகளைக் 'குருதியாட்டம்' புதினம் முன்வைக்கிறது. இருளப்பசாமி கோவில் பூசாரி தவசியாண்டி. இவர் நாவிதர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் ஊரைவிட்டுச் சென்றுவிட்டதால் 20 வருடங்கள் திருவிழா நடத்தப்படாமல் இருக்கிறது.

"ஒரு தலைமுறைச் சனம் குலசாமி கோவில் திருவிழாவையே பார்க்கலே! சாமியாடி இல்லாமல் நடக்கிற கொடை. தாயி இல்லாமல் நடக்கிற கல்யாணத்துக்குச் சமம். ஊர் பிழைக்கணும்னா இந்த வருசம் கோவில் திருவிழாவை நடத்தனும். எங்க காலம் எப்படியோ ஓடிருச்சு. சின்னஞ்சிறுசுகள் சேதாரமில்லாமல் இருக்கணும். ஊரைப் பிடிச்ச இந்த சாபம் தீர்றது... உன் கையிலேதான் இருக்கு தவசியாண்டி. உனக்கு, யார் மேலே என்ன கோபம் இருந்தாலும்... குலதெய்வம் இருளப்பசாமிக்காக நீ வந்து திருவிழாவை நடத்திக்கொடுக்கணும்" (Vela Ramamurthy, 2021b).

எனப் பெருங்குடி கிராமத்தின் பெரியவர்கள் இருளப்பசாமி திருவிழாவை நடத்திக் கொடுக்குமாறு சாமியாடி தவசியாண்டியை அழைக்கிறார்கள். 'இருளப்பசாமி' என்னதான் மறவர்களின் குல தெய்வமாக இருந்தாலும் அவர் திருவிழாவை மறவர்கள் மட்டும் ஒன்றிணைந்து நடத்திவிட முடியாது என்பது இதன் மூலம் புலனாகிறது.

இருளப்பனுக்கு நாவிதர் சமூகத்தைச் சேர்ந்தவர் பூசாரியாக இருப்பதைப் போல, தென் மாவட்டங்களில் பல நாட்டார் தெய்வங்களுக்கு ஆதிதிராவிடர் சமூகத்தினர் கோவில் பூசாரிகளாகவும், சாமியாடிகளாகவும் இருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட இனத்தினர் வணங்கும் தெய்வத்திற்கு அவ்வினத்தினரல்லாத மாற்றுச் சமூகத்தினர் சாமியாடிகளாகவும், பூசாரிகளாகவும் இருந்து வருகின்றனர். ஒரு வழியாகத் திருவிழா முடிவு செய்யப்பட்டுவிட்டது.

"பந்தக்கால் ஊன்றி, காப்பு கட்டியதிலிருந்து, ஊருக்குள்ளே கள்ளு, சாராயப் புழக்கமில்லை கால் அதிரும் நடை இல்லை காது அதிரும் பேச்சு இல்லை.

எல்லா ஆண்களும் வலது கையில் மஞ்சள் காப்பு கட்டி, பக்தி பழுத்துப்போய் இழைந்து திரிந்தார்கள். பெண்கள் எல்லாம் மஞ்சள் சேலையில் அதிகாலைக் குளியலாடி நீர் சொட்டச் சொட்ட, நுனி முடியில் கொண்டை இட்டிருந்தார்கள்.

இளவட்டங்கள், பத்து நாள் தாடியை சொரிந்துகொண்டு அலைந்தார்கள். புஷ்பவதி ஆகாத ஏழு பெண் குழந்தைகளை 'பேச்சியம்மன்' ஆக்கி, கூனிக்கிழவி வீட்டுமுன் நித்தமும் ஊர்கூடி பாத பூஜை செய்தார்கள். நாராயணத்தேவர் வீட்டு சனிமூலை இருட்டுக்குள் நூறு, இருநூறு முளைப்பாரிகள் வளர்ந்து கொண்டிருந்தன. இந்த வருட முளைப்பாரி எக்குப் போட்டு வளர்வதைப் பார்த்தால் 'நல்ல மழை பெய்து, நாடு செழிக்கும்' என்பதில் அட்டி இல்லை. 'நாடு செழிக்குதோ... இல்லையோ... நம்ம ஊரைப் பிடிச்ச பீடை விலகணும். அதுபோதும் என்பதுதான் ஊர்க்கணக்கு" (Vela Ramamurthy, 2021b).

பத்து நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் பத்தாம் நாள் சில முக்கியச் சடங்குகள் நிகழ்கின்றன. இவற்றில் ஒன்று வைக்கோல் பிரி ஆட்டம். நேர்த்திக்கடன் வைத்திருக்கும் இளைஞர்கள் இரவெல்லாம் வைக்கோலைப் பிரியாக முறுக்கி மறுநாள் தங்கள் உடம்பு முழுக்க உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கண்பார்க்கக்கூட இடைவெளி இல்லாமல் சுற்றி வாளேந்தி ஆடிவருவார்கள். அப்போது வாளுக்கு வாள் ஆக்ரோஷமாக வெட்டுவிழும். இந்நிகழ்வின்போது வெட்டுப்பட்டால், அது 'சாமிக் குத்தம்' என்கிற நம்பிக்கையும் நிலவுகிறது.

“வைக்கோல் பிரி ஆட்டத்தில் வெட்டுப்பட்டு செத்தால், கொலைக் கேஸ் கிடையாது. ‘சாமி காரியத்திலே குளிர்ந்துட்டான்’ என ஊர்கூடி அடக்கம் பண்ணும். திருவிழாச் சாக்கில் முன் பகையைத் தீர்த்துக்கொள்ள நினைப்பவனை, ‘சாமி பார்த்துக்கொள்ளும்’ என்பார்கள். போன திருவிழாவிலே, நல்லாண்டியின் தம்பி வெட்டுப்பட்டு செத்தான். வெட்டுனவன் பிரி ஆட்டக் கூட்டத்துக்குள்ளே கலந்துவிட்டான். இன்னாருன்னு தெரியலே.

கையில் எடுத்து ஆடிவரும் வாள், அந்தந்த வீட்டுக்கு, ‘சாமி வாள்’. சாமி வாளை வேறு எந்தக் காரியத்துக்கும் கையில் எடுக்கக் கூடாது.” (Vela Ramamurthy, 2021b).

இருளப்ப சாமிக்கு நேர்த்திக்கடனாக நடத்தப்படும் ‘இப்பிரியாட்டச் சடங்கு’ நரபலிச் சடங்கிற்கான எச்சங்களைக் கொண்டிருக்கிறது. ‘இருளப்பனுக்கு கடாய் வெட்டிப் பலியிடும் பூசையும் நடக்கிறது.’ (குருதி., ப.82) ‘இருளப்பன் சாமி கோவிலின் முன்பாக உள்ள ஆலமரத்தைச் சுற்றிலும் சிதறு தேங்காய்களை உடைத்தும் மக்கள் வழிபடுகிறார்கள்’. (Vela Ramamurthy, 2021b).

பெருநாழியில் நடைபெறும் ‘அம்மன்’ திருவிழா குறித்த பதிவு குற்றப்பரம்பரை புதினத்தில் இடம்பெறுகிறது. இத்திருவிழாவிலும் முளைப்பாரி, கிடாய்வெட்டு, சிதறுதேங்காய் விடுதல் முதலிய வைபவங்கள் நடைபெறுகின்றன (Vela Ramamurthy, 2021a). இத்திருவிழாவில் கொம்பூதியைச் சேர்ந்த வேயன்னா கூட்டத்தினர் எருதுகட்டிற்குச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்படுகின்றனர். இவ்விழா பெருநாழி நிறைகுள வள்ளியம்மனுக்கு நடத்தப்படும் திருவிழா ஆகும்.

பட்டத்து யானை புதினத்தில் ஆப்பநாட்டு மறவர்கள் வழிபடும் மேலும் சில நாட்டார் தெய்வங்கள் குறித்த பதிவுகள் இடம்பெறுகின்றன. “ஆப்பனூர் கிராம தேவதை அரியநாச்சி” முதுகுளத்தூர் “சுடலைமாடன், துடியான தெய்வம்” (ப.52), “வடக்குவாச செல்லியம்மன்” “செங்குளம் உடையநாச்சி” (Vela Ramamurthy, 2021c), முதலிய தெய்வங்கள் குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இத்தெய்வங்கள் ஆப்பநாட்டு மறவர்கள் மட்டுமல்லாமல், பல இனத்தவரும் வணங்கும் தெய்வங்களாகும்.

காளி, முனி வழிபாடு தென் தமிழகத்தில் பரவலாக உள்ளது. காளி மற்றும் முனி குறித்த நம்பிக்கைகள் சங்ககால இலக்கியங்களில் காணப்படும் அணங்கு மற்றும் முருகு ஆகியவற்றை ஒத்திருக்கிறது. “சோனஸ்பிரியாங்கோட்டை காளி ஆண்களை அடிக்கும். கூராங்கோட்டை முனி பெண்களைப் பிடிக்கும்” (Vela Ramamurthy, 2021). சங்க இலக்கியத்தில், ‘அணங்கு’ ஆண்களை வருத்தும் பெண்தெய்வம். எனவே ‘காளி, - முனி’, ‘அணங்கு - முருகு’ ஆகியவற்றிற்கிடையே ஏதோ ஒரு வகையில் ஒரு தொடர்ச்சி இருப்பதாகக் கருத வாய்ப்புள்ளது.

பல இனத்தவர்களால் வணங்கப்படும் கமுதி ‘கோட்டை - முனீஸ்வரன்’ அங்கே உள்ள மற்றொரு தெய்வமான ‘வழிவிட்ட அய்யனார்’ முதலிய தெய்வங்களையும் ஆப்பநாட்டு மறவர்கள் வழிபடுகின்றனர். இவர்தம் வழிபாட்டு முறைமைகளைத் தொகுத்து நோக்கும்போது, இருளப்பசாமியே ஆப்பநாட்டினருக்குப் பாத்தியப்பட்ட மற்றும் முதன்மையான தெய்வமாகத் திகழ்கிறது என்பதை வேல ராமமூர்த்தியின் புதினங்கள்வழி அறிய முடிகிறது.

## முடிவுரை

தெய்வங்களின் தோற்றங்களுக்கும் மக்களின் செயல்பாடுகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளதை அறியமுடிகிறது. நாட்டார் தெய்வங்கள் அங்குள்ள மக்களின் உணர்ச்சிகளால் கட்டப்பட்டவை. அவர்களின் வாழ்வு, தாழ்வு எதுவாக இருந்தாலும் அவர்களின் கடைசிப் புகலிடமாக அத்தெய்வங்களே இருப்பதைக் காணமுடிகிறது. ஆப்பனாட்டு மறவர்கள் தைரியமானவர்கள் ஆனால் தெய்வத்திற்கு அஞ்சுபவர்கள். நாட்டில் வாழும் பெரும்பாலான மக்கள் சூரியனை வழிபாடு செய்ய, ஆப்பனாட்டு மனிதர்கள் மட்டும் இருளை வணங்கும் வேறுபாடு கொண்டுள்ளனர். இருளப்பசாமியும், இருளாயியும் இருளுக்கான தெய்வங்களாக அறியப்படுகின்றன. இத்தகு தெய்வங்களை அவர்கள் உருவாக்க அவர்களது தொழில் காரணமாக இருந்துள்ளதை உணரமுடிகின்றது. ஆப்பனாட்டு மறவர்கள் காளி மற்றும் முனி போன்ற உக்கிரமான தெய்வங்களை அதுவும் ஆயுதம் தாங்கிய தெய்வங்களை

வழிபடுவது அவர்களின் போர்க்குணத்தையும், ஆயுதக் கலாச்சாரத்தையும் காட்டுவதை அறியமுடிகின்றது.

## References

Bhakthavachala Bharathi, (2003) Panpaattu Maanidaviyal, Meyyapan Pathippagam, Chidambaram, India

Paramasivam, T. (2019) Paramasivam Near Kanalkal, Kalachuvadu Publications, Nagercoil, India

Ramachandran, N. (2002) Thudiyana Samigal, Makkal Veliyedu, Chennai, India

Tamilselvan, S. (2003) Nattar Theivangal, Namadhu Nesa Aani, Chennai, India

Vela Ramamurthy, (2019) Ariyanatchi, Discovery Book Palace, Chennai, India

Vela Ramamurthy, (2021a) Kutrap Parambarai, Discovery Book Palace, Chennai, India

Vela Ramamurthy, (2021b) Kuruthi Attam, Discovery Book Palace, Chennai, India

Vela Ramamurthy, (2021c) Pattathu Yanai, Discovery Book Palace, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License